மலர் 1 இதழ் 3 ஜனவரி, 2017 ISSN : 2454-3993

# ஆ. கணேசன் கவிதை நாடகங்களில் சாதிகள் அற்ற மானுட சமுதாய பார்வை

சி. கோவிந்தராஜ்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

**முன்னுரை**

படிப்பதற்கும் நடிப்பதற்கும் தகுந்த முறையில் எழுதப்பட்ட நாடகமான கவிதை நாடகங்கள் படிப்பதற்கு ஏற்றவைகளாகவே இருக்கின்றன. இவ்வகையான நாடகங்கள் செய்யுள் வடிவில் இருந்தாலும் யாப்பு முறைப்படி அமைந்திருக்கின்றன. செய்யுள் வடிவிலான கவிதை நாடகங்கள் அதிகளவில் இடம் பெறுகின்றன. "மனோன்மணியம்" நாடகமே செய்யுள் வடிவில் அமைந்த முதல் கவிதை நாடகமாகும். கவிதை நாடகங்களில் பெரும்பாலும் சமுதாய பிரச்சனைகள், சாதி வேறுபாடுகள் இல்லாத மானுட சமுதாயம் உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தை வைத்துக் கவிதை நாடகங்கள் படைக்கப்படுகின்றன. அவற்றில் ஆன்மீக அடிப்படையிலான கவிதை நாடகத்தை ஆ.கணேசன், வள்ளலார், தாயுமானவர், அண்ணன்மார் சுவாமி கதை, ராமானுஜர் பற்றிய கவிதை வடிவிலான நாடகங்களில் சாதி இல்லா சமுதாயம் அமைய வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றார். இக்கருத்தினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**ஆ.கணேசனின் கவிதை நாடகம்**

கொங்கு நாட்டில் கோயமுத்துார் மாவட்டத்தில் ஆ.கணேசன் பிறந்தார். இவர் ஆன்மிகத்துடன் நாடகத்தையும் இணைத்துக் கவிதை வடிவில் நாடகத்தைப் படைத்தார். இவரின் கவிதை நாடகம் சமுதாயத்திற்கு நல்ல கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைக்கும்வகையில் ஆன்மீகத்துடன் தொடர்புடைய மகான்களைக்கொண்டு சமுதாயத்திற்கு நல்ல நோக்கமுடைய கருத்துக்கள் உடைய கவிதை நாடகங்கள் படைத்துள்ளார். அர்த்தமுள்ள கவிதைகள் உலக ஜோதி(கவிதை நாடகம்), குருவைத் தேடி வைணவத்திலகம் (கவிதை நாடகம்),

ஸ்ரீ பகவான் கிருஷ்ணர் துதிகள் அண்ணன்மார் சுவாமி கதையில் தலையூர்க்காளியும் மாயவரும் (கவிதைநாடகம்), சுவாமி தாயுமானவர் (கவிதை நாடகம்), கண்ணப்ப நாயனார் (கவிதை நாடகம்), போன்ற கவிதை நாடகங்களைப் படைத்துள்ளார். சாதி சமய வேற்றுமைகளை ஒழித்து மக்களிடம் ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை மக்களிடம் ஏற்படுத்தும் நோக்கில் கவிதை நாடகங்கள் எழுதப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

**கவிதை நாடகங்களில் சாதிகள் அற்ற மானுட சமுதாயம்**

"சாதியிரண்டொழிய வேறில்லை" என்றார் ஔவையார். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்றார் திருமூலர். "சாதிப்பிரிவினிலே தீமூட்டுவோம்" என்றார் பாம்பாட்டி சித்தர். "சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே சாத்திச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே ஆதியிலே அபிமனித்து அலைகின்ற உலகீர் (இருண்ட சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை இடுவாய்செயில் எருவாக்கிப் பொட்டு மருட்சாதி சமயங்கள் மதங்கள் அக்கிரம வழக்கெல்லாம் குழிகொட்டி மண்மூடிப் போடு" என்ற வள்ளலாரின் வாக்கிற்கிணங்க சாதியின் கொடுமையை முற்றிலும் விலக்க வேண்டியது அவசியமாகும். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பது வள்ளுவரின் கூற்று. இருண்ட இந்தியாவில் எழுந்த சூரியன் போன்று மகாத்மா காந்தி சாதி மத பேதத்தைப் போக்க மூச்சுள்ள வரை பாடுபட்டார். எல்லாரும் இந்தியர் நமக்கு பேதமில்லை என்று முழங்கிய தெய்வமகன் காந்தி நடந்த வழியே "காந்தி மார்க்கம்" என்னும் அடிப்படையில் சாதிகளை ஒழிப்பது பற்றிய கருத்தையே ஆன்மீக மகான்களின் வழியில் ஆ.கணேசன் குறிப்பிடுகிறார்.

"உலகஜோதி" என்னும் கவிதை நாடகத்தில்

"சாதி சங்கம் சண்டைகள் மலிந்து
..........................................................
மதத்தின் மீது மதங்கொண் டழியும்
அழிவின் முடிவில் அனுபவ அறிவில்
பழியினைக் களைந்து பண்பை வளர்த்து" (உலகஜோதி, ப.108)

சாதி என்ற சண்டையில் மக்கள் அனைத்து உயிர்களையும் மதங்களின் பெருமையும் அழித்துக் கொண்டும் அனுபவ அறிவின் பண்பாட்டை அழித்து விடுகின்ற நிலையை உணர்த்துகின்றது.

மேலும்

"வீதிதோறுள்ள சங்கம்
வேற்றுமை உணர்வால் வளர்க்கும்
சாதிகள் பேத மெல்லாம்
சரிந்து வீழ்ந் தழிந்தொரு நாளில்
நீர்மையில் கரைந்தே போகும்" (உலகஜோதி - ப.109)

அதாவது, தெருக்கள் தோறும் சாதி சமயங்களை அழித்து சாதி மத பேதமின்றி வேற்றுமை உணர்வை வளர்க்கும் சுடர் ஒளியாகவும், ஆதியாகவும் நிற்கக் கூடியவர் வள்ளலார்.

"நல்லார் வாழ்வை வளமாச் செய்வது

....................................................................

தொன்னெறி கொண்டு ஞாலம் விளங்க"(உலகஜோதி- ப.112 - 113)

வாழ்க்கையை வளமுடனும் நலமுடனும் வாழ்வதற்கு ஒற்றுமை உணர்வை ஊட்டியும் வேற்றுமை என்னும் சாதி வேறுபாடுகளை வேரோடு அழித்து உலகில் அன்பையும் நன்னெறிப் பண்புகளை வளர்த்தல் என்பது வள்ளலாரின் கருத்தாக அமைந்துள்ளது.

"ஒருமதம் உயர்ந்தது ஒருமதம் தாழ்ந்தது

......................................................................

வேறு வேறு வழிகளே ஆகும்" (உலகஜோதி- ப.113)

மதங்களில் உயர்வு தாழ்வு பொய் என்றும் தங்கள் மதங்களில் உள்ள கொள்கைகள் மட்டுமே சிறந்தது என்ற எண்ணம் பலரது மனதில் உள்ளதைக் களைந்து கடவுளின் முடிவே இறுதி என்று நினைத்தல் வேண்டும் என்றவாறு "உலகஜோதி" கவிதை நாடகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது..

"வைணவத்திலகம்" கவிதை நாடகத்தில்

"தீண்டத் தகாத பேர்கள் என்பது

...................................................................

நல்ல தல்ல" (வைணவத்திலகம் - ப.26)

அதாவது தீண்டாமைக் கொடுமை என்பது இந்த உலகில் இருப்பது இயல்பே என்றவாறு இந்நாடகத்தில் வரும் கதாபாத்திரம் கூறுவதாக ஆசிரியர் படைத்து அக்கொடுமையை எவ்வாறு அகற்றிட வேண்டும் எனவும் பதிவு செய்துள்ளார்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றமை யான்" (திருக்குறள் - 972)

இக்குறள் எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒத்த தன்மையானதே ஆயினும் செய்கின்ற தொழில்களின் வேறுபாடுகளால் ஒத்திருப்பதில்லை என்கிறது.

"சாதிகள் அற்ற சமூகம் அமைய

ஆசைப்பட்டேன் இது முதல் ஆசை" (வைணவத்திலகம் - ப.29)

சாதிகளே இல்லாத சமூக அமைய வேண்டும் என்று ஆளவந்தார் அவர்களின் ஆசையை ராமானுஜர் நிறைவேற்றினார் என்பதை வைணவத்திலகம் கவிதை நாடகம் உணர்த்துகின்றது.

"சாதி என்னும் வேற்றுமை இல்லா

சமூகம் அமைய கடைநாள் வரையில்

ஆற்றுவேன் ஆற்றுவேன் அரும்பணி ஆற்றுவேன்" (வைணவத்திலகம் - ப.39)

சாதி இல்லாத சமயமும் சமயம் இல்லாத சாதியும் வேற்றுமைகளைக் களைத்து உயிர் மூச்சு உள்ள வரை இச்சமூகத்திற்காகப் போராடுவேன் என்று ராமானுஜர் கூறுகின்றார்.

"கீழோர் மேலோர் என்று சமூகம்

........................................................

ஆக்கிட வேண்டும் அரங்கன் அருளால்" (வைணவத்திலகம் - ப.39)

நம்முடைய நாட்டில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாட்டைக் கொண்டுள்ள நிலையில் கடவுளின் படைப்பில் ஆண் - பெண் என்ற நிலையே அற்புதப் படைப்பு என்றும் அதில் வேற்றுமை என்ற நிலையே இல்லாத படைப்பே வேண்டும் என்றும் கடவுளிடம் அருள் வேண்டுகிறார் இராமானுஜர்.

"நால்வகை வருணம் என்பதே இல்லை

நாரா யணனுக் கெல்லாம் ஒன்றே"(வைணவத்திலகம் - ப.39)

சாதிகள் நான்கு நிலையில் பிரித்துக் கூறுவர். ஆனால் இறைவனுக்கு நால்வகை வருணம் என்பது இல்லை. அனைவரும் ஒன்றே என்பதாக அறியப்படுகிறது.

"மானிட சாதி என்பது அன்றி

மற்றோர் சாதி மண்ணில் இல்லை" (வைணவத்திலகம் - ப.46)

உலகில் ஆண் - பெண் என்ற நிலையில் மட்டுமே தான் மனித இனம் உள்ளது. மானிட சாதி மட்டுமே உள்ளன என்றாலும் மண்ணிலும் உலகிலும் மற்ற சாதிகள் என்பதே கிடையாது என்கிறார் இராமானுஜர்.

"சாதி சாதி என்று மீண்டும்

மன்னிக்க முடியா மாசு ஆகும்" (வைணவத்திலகம் - ப.50)

சாதி. சாதி என்ற சொல்லைத் தவிர்த்து சமூகமானது பிறப்பில் மானிட சாதி என்னும் மனிதனுள் உயர்வு தாழ்வு பார்ப்பது மன்னிக்க முடியாத குற்றம் என்று "வைணவத்திலகம்" கவிதை நாடகத்தில் மனித இனம் ஒன்றே என்று ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

**தாயுமானவர் நாடகத்தில்**

"சாதி சமய வேறுபாடு இல்லாது

சகலரும் சகோதரர் என்றே நினைப்பீர்" (தாயுமானவர் - ப.38)

சாதியும் சமயமும் இல்லாத நிலையில் உலகில் அனைவரும் சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும் என வலியுறுத்திக் கூறியுள்ளார் சுவாமி தாயுமானவர்.

"சாதிகள் இல்லையடி பாப்பா" என்னும் பாடல்கள் மூலம் நம் நாட்டில் சாதிகள் என்பதே இல்லை என்பததையே பாரதியாரும் வலியுறுத்திப் பாடியுள்ளார்.

**தாயுமானவர் நாடகத்தில்**

"மதங்கள் பற்பல ஆனாலும்

..................................................

என்றும் கொடுத்திடல் ஆகாது" (தாயுமானவர் - ப.76)

உலகில் பல மதங்கள் தோன்றி இருந்தாலும் மனித உணர்வும் மண்ணில் தோன்றிய மொழியே முதல் மொழியாக விரும்பியதையும் வேறுபாட்டுணர்வை அழித்து வாழ்வில் ஒற்றுமை உணர்வுடனும் வாழ வேண்டும் என்பதே மதங்களின் விருப்பமாக உள்ளதையே தாயுமானவாரும் வள்ளலாரும் முன் வைக்கின்றனர்.

**முடிவுரை**

நாடகத்தின் மூலமாக மக்களிடைய உள்ள சாதி மத வேறுபாடுகளை அகற்றவும், மக்களிடம் சாதி பேதமின்றி சமத்துவம் சகோதரத்துடன் வாழ வேண்டும் என்ற விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதோடு நின்றுவிடாமல் நாம் வாழும் உலகில் சாதி மத பூசல்களைக் களைந்து ஒற்றுமை உணர்வுடன் வாழ வேண்டும் என்பதனை உணர்த்தும் வகையில் ஆ.கணேசனின் கவிதை நாடகம் அமைந்துள்ளது. கவிதை நாடகத்தின் வழியாகவும், ஆன்மீக மகான்களின் மூலமாக வேற்றுமைகளைக் களைந்து, மனித இனம் என்பது ஒன்றே ஒன்று தான் என்ற கருத்தை ஆ.கணேசன் வலியுறுத்துகின்றார். தாயுமானவர், வள்ளலார், இராமானுஜர் போன்ற ஆன்மீக நெறியாளர்கள் மக்களிடம் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் வளர்ப்பதோடும் மட்டுமின்றி ஒற்றுமையுடன் மனித இனம் வாழ வழி செய்ய வேண்டும் என்ற கருத்தையே கூறியுள்ளனர். ஆ.கணேசன் தம் கவிதை நாடகத்தில் இக்கருத்தை முன்வைத்து, சாதிகள் அற்ற சமூகம் அமையக் கூறப்பபட்டுள்ள சீர்திருத்தக்கருத்துகளை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

**பார்வை நூல்கள்**

1. ஆ.கணேசன், உலக ஜோதி
2. ஆ.கணேசன், வைணவத்திலகம்
3. ஆ.கணேசன், சுவாமி தாயுமானவர்
4. மு.வ. உரை, திருக்குறள்
5. கு.வே. பாலசுப்பிரமணியன்(உ.ஆ), புறநானூறு